செய்தி வெளியீடு எண்:121 நாள்: 20.02.2018

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (20.2.2018) தலைமைச் செயலகத்தில், உள்துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் 1 கோடியே 83 லட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள சமையலறைக்கூடத்துடன் கூடிய காவலர்களுக்கான பாளையத்தை (Barracks) காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 6 கோடியே 38 லட்சத்து 79 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள 23 காவலர் குடியிருப்புகள், 5 காவல் நிலையங்கள், தமிழ்நாடு சிறப்பு காவல் 4–ஆம் அணிக்கான பாளையம் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் கோட்ட அலுவலகம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்

மாநிலத்தின் அமைதியைப் பேணிப் பாதுகாப்பது, சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பது போன்ற பல்வேறு முக்கிய பணிகளை காவல்துறை ஆற்றி வருகின்றது. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த காவல்துறையின் பணிகள் மேலும் சிறக்க, புதிய காவல் நிலையங்கள் மற்றும் காவலர் குடியிருப்புகளைக் கட்டுதல், காவல்துறை அலுவலகங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ரோந்து பணிகளை மேற்கொள்ள புதிய வாகனங்களை வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் 1 கோடியே 83 லட்சத்து 34 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள சமையலறைக்கூடத்துடன் கூடிய காவலர்களுக்கான பாளையத்தை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், திருவாரூர் மாவட்டம் – குடவாசலில் 11 குடியிருப்புகள், திருநெல்வேலி மாவட்டம் – திருவேங்கடத்தில் 12 குடியிருப்புகள், என 1 கோடியே 91 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள 23 காவலர் குடியிருப்புகள்;

கடலூர் மாவட்டம் – நெய்வேலி நகரம், வேலூர் மாவட்டம் – அணைக்கட்டு, விழுப்புரம் மாவட்டம் – வானூர் மற்றும் நல்லாண் பிள்ளை பெற்றாள், காஞ்சிபுரம் மாவட்டம்

– காஞ்சிபுரம் தாலுகா ஆகிய இடங்களில் 3 கோடியே 12 லட்சத்து 53 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 காவல் நிலையங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம் – கோவைப்புதூரில் 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு சிறப்பு காவல் 4–ஆம் அணிக்கான பாளையம்;

திருவண்ணாமலை மாவட்டம் – வெங்கிகல்லில் 54 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் கோட்ட அலுவலகக் கட்டடம்;

என மொத்தம், 8 கோடியே 22 லட்சத்து 13 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், தமிழ்நாடு சிறைத்துறையில், உதவி சிறை அலுவலர் பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தெரிவு செய்யப்பட்ட 83 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 7 நபர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.சி.வி. சண்முகம், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடுத் துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. டிகே. ராஜேந்திரன், இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்குநர் திரு.கே.பி. மகேந்திரன், இ.கா.ப., சிறைத் துறைத் தலைவர் திரு.ஆசுதோஷ் சுக்லா, இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டுவசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு.ந.தமிழ்செல்வன், இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 20.2.2018